# மாதாவின்  வணக்கமாதம்

**அடிக்கடி சொல்ல வேண்டிய சுகிர்த செபம்:**

**1ம் நாள்:** பரிசுத்த கன்னிகையே! என் தாயே! ஆண்டவளே, என்னை வழி நடத்தியருளும்.

**2ம் நாள்:** உம்முடைய மாசில்லாத கன்னிமையையும் ஜென்ம பாவமில்லாமல் உற்பவித்த மகிமையையும் பார்த்து பரிசுத்த கன்னிமரியாயே! என் ஆத்துமத்தையும் சரீரத்தையும் சுத்தப்படுத்தியருளும்.

**3ம் நாள்:** பிதாவாகிய சர்வேசுரனுக்குப் பிரியமுள்ள குமாரத்தியே வாழ்க. சுதனாகிய சர்வேசுரனுக்குத் தாயாரே வாழ்க! இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரனுக்கு மிகவும் பிரியமுள்ள தேவாலயமே வாழ்க.

**4ம் நாள்:** மாமரியே வாழ்க, ஆண்டவளே வாழ்க, சமுத்திரத்தின் நட்சத்திரமே வாழ்க.

**5ம் நாள்:** உம்முடைய தயாபமுள்ள திருக்கண்களை எங்கள் பேரில் திருப்பியருளும்.

**6ம் நாள்:** நான் உம்மை ஸ்துதிக்கவும், என் சத்துருக்களை வெல்லவும் உதவி செய்தருளும் தாயே!.

**7ம் நாள்:** எங்கள் ஜீவியமே, எங்கள் தஞ்சமே, எங்கள் மதுரமே, வாழ்க.

**8ம் நாள்:** இயேசுக்கிறிஸ்து நாதருடைய திருவாக்குத்தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரமாய் இருக்கத்தக்கதாக. தேவதாயே எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.

**9ம் நாள்:** ஓ! மரியாயே! தயையுள்ள கன்னிகையே, கிருபாகரியே, கருணாகரியே, அருணோதயமே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்!

**10ம் நாள்:** பிரியதத்தத்தினாலே பூரணமானவளே வாழ்க!

**11ம் நாள்:** ஓ! தேவமாமதவே, மெய்யான சர்வேசுரனான இயேசுக் கிறிஸ்துநாதர்பேரில் என்னுடைய இருதயம் தேவ சிநேகத்தால் பற்றி எரியச் செய்தருளும்.

**12ம் நாள்:** எங்களுடைய ஆண்டவளே, எங்களுடைய உபகாரியே, எங்களுக்காக உம்முடைய திருக்குமாரனிடத்தில் வேண்டிக்கொள்ளும்.

**13ம் நாள்:** பாவிகளுக்கு அடைக்கலமே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

**14ம் நாள்:** தேவமாதாவே! உம்முடைய தயாபமுள்ள திருக் கண்களை எங்கள் பேரில் திருப்பியருளும்.

**15ம் நாள்:** நல்ல உபகாரியே, உமதுபேரில் என் நம்பிக்கை எல்லாம் வைத்திருக்கிறேன்.

**16ம் நாள்:** நேசத்துக்குரிய தாயாரே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

**17ம் நாள்:** உம்மிடத்தில் பிறந்து எங்களை மீட்க வந்த இயேசு நாதர் உமது வழியாக எங்களுடைய வேண்டுதலை ஏற்றுக் கொள்ள அருள் புரிவாராக.

**18ம் நாள்:** கிறிஸ்தவர்களுடைய சகாயமே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

**19ம் நாள்:** கிறிஸ்தவர்களுக்கு சகாயமே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

**20ம் நாள்:** தயாளமுள்ள தாயாரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்!

**21ம் நாள்:** பரிசுத்த கன்னிகையே! இயேசுநாதருக்குப் பின் நீரே என் உறுதியான நம்பிக்கையாயிருக்கிறீர்.

**22ம் நாள்:** எங்கள் தாயே! நாங்கள் சாகிற வேளையில் எங்கள் ஆத்துமம் மோட்ச பேரின்பத்தை அடையக் கிருபை செய்தருளும்.

**23ம் நாள்:** கன்னிகைகளுக்குள் உத்தம கன்னிகையே நான் என் பாவங்களை வெறுத்து எப்பொழுதும் உம்மை நோக்கி அழும்படியாக உதவி செய்தருளும்.

**24ம் நாள்:** ஓ! மரியாயே, இஷ்டப்பிரசாதத்தின் மாதாவே, தயையின் சமுத்திரமே, என் எதிரிகளிடமிருந்து என்னைக் காப்பாற்றி என் மரண வேளையில் என்னைக் கைவிடாதேயும்.

**25ம் நாள்:** ஓ! தாயாரே, உம்முடைய அடைக்கலத்தில் நாங்கள் இருக்கிறது பேரின்ப பாக்கியம்.

**26ம் நாள்:** பரிசுத்த தாயாரே, எங்களைப் பரிசுத்தராக்கி எங்களை மோட்சத்துக்கு போகும் வழியில் நடப்பித்தருளும்.

**27ம் நாள்:** தேவமாதாவின் மாசற்ற இருதயமே! இயேசுகிறிஸ்து நாதருடைய திரு இருதயத்தின் உத்தமமான சாயலே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

**28ம் நாள்:** சகல மோட்சவாசிகளுக்கும் இராக்கினியே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்!

**29ம் நாள்:** மோட்ச இராக்கினியே! நான் உம்மிடத்தில் சேருமளவும் என்னைக் கைவிடாதேயும்.

**30ம் நாள்:** தேவமாதாவின் அடைக்கலத்தைத் தேடியவர்களுள் அதைப் பெறாமலிருப்பவர்களுண்டோ?

**31ம் நாள்:** உம்முடைய பிள்ளைகளாய் இருக்கிற எங்களைக் காப்பாற்றி இரட்சியும் தாயாரே!